www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi12T

தென்காசி மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2025

வகுப்பு 12

கால அளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

22/01/25

பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **14×1=14**

1) காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

2) 21 நரம்புகளைக் கொண்டது

அ) பேரியாழ் ஆ) மகரயாழ் இ) செங்கோட்டியாழ் ஈ) சகோடயாழ்

3) இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கணநூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

4) **பொய்யாவானம்** புதுப்பெயல் பொழிந்தென தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல்தொடர்

இ) பண்புத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

5) திருக்குறளில் உள்ள இயல்களின் எண்ணிக்கை

அ) 6 ஆ) 7 இ) 9 ஈ) 8

6) உவா உறவந்து கூடும்

உடுபதி இரவி ஒத்தார் - யார்? யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்

இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

Sivakumar Tenkasi

7) 1. திருவல்லிக்கேணி ஆறு - அ) மாவலிபுரச் செலவு

2. பக்கிங்காம் கால்வாய் - ஆ) கல்கோடாரி

3. பல்லாவரம் - இ) அருங்காட்சியகம்

4. எழும்பூர் - ஈ) கூவம்

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1

8) ஆர்பரிக்கும் கடல்

அதன் அடித்தளம்

மௌனம், மகா மௌனம் அடிகள் புலப்படுத்துவது

அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்

இ) நிறைகுடம் நீர் தழும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

9) சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

10) ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) சமணமும் தமிழும்

இ) இசுலாமும் தமிழும் ஈ) கிறிஸ்தவமும் தமிழும்

11) தமிழின் திணைப் பாகுபாடு எவற்றின் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது?

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு

இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

12) **பொருத்துக:**

அ) மாச்சீர் - 1. கருவிளம், கூவிளம்

ஆ) காய்ச்சீர் - 2. நாள், மலர்

இ) விளச்சீர் - 3. தேமாங்காய், புளிமாங்காய்

ஈ) ஓரசைச்சீர் - 4. தேமா, புளிமா

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



13) படிமம் என்பதன் பொருள்

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 3, 1, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

14) சிற்பி பாலசுப்பிரமணியம் எந்த நூலிற்காக சாகித்ய அகாதமி விருது பெற்றார்?

அ) ஒளிப்பறவை ஆ) சர்ப்ப யாகம் இ) சூரிய நிழல் ஈ) ஒரு கிராமத்து நதி

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×2=6**

15) எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் - யாருக்கு?

16) கலி விழா - ஒலி விழா விளக்கம் தருக.

17) ஞாலத்தின் பெரியது எது?

18) முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியம் கூறும் காரணத்தை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

19) பசுமைக்குடில் வாயுக்கள் எவை?

20) பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும் சான்று தருக.

21) கீழ்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

23) **ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக்குறிப்பு தருக:**

அ) தொல்நெறி ஆ) செற்றவர்

24) **ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) தந்தனன் ஆ) தாங்கிய

25) திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

26) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

புள்ளைக்கு உடம்பு சரியில்லை. மூணுநாளா சிரமப்படுது.

27) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**

ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம் உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லவனவற்றை கற்று கொடுக்கும்.

28) ஒரு விகற்பம் பல விகற்பம் என்றால் என்ன?

29) **பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்கவும்:**

புல் - புள் (அல்லது கான் - காண்

30) **விடைக்கேற்ற வினா அமைத்தல்:**

விடை: குடும்பம் என்ற சொல் முதன் முதலில் திருக்குறளில் தான் இடம்பெற்றுள்ளது.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×4=8**

31) பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையை திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

32) யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - **உவமையைப் பொருளோடு பொருத்துக.**

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

33) ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் - **இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

34) குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

**பிரிவு - 2**

**ஏவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×4=8**

35) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விவரி.

36) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37) பேரிடர் மேலாண்மை ஆணையம் விளக்குக.

38) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க பண்பாகும் விளக்குக.

**பிரிவு - 3**

**ஏவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×4=12**

39) கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக?

சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**(அல்லது)**

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்.

- **இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

40) **இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை விளக்குக)**

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன் திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

- **பாரதிதாசன்**

41) செவியறிவுறூஉ துறையைப் பிசிராந்தையார் பாடல்வழி நிறுவுக.

**(அல்லது)**

நெய்தல் திணையை அம்மூவனாரின் பாடல்வழி நிறுவுக.

42) **பின்வரும் பழமொழி வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:**

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

**(அல்லது)**

ஆ) வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்

43) **தமிழாக்கம் தருக:**

1. A new language is a new life.
2. Prevention is better than cure.
3. Man proposes; god disposes.
4. Knowledge of languages is the doorway wisdom.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43) **செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பரிதிமாற்கலைஞருடனான மறைமலையடிகள் நட்பு தனித்தமிழ் மீதான பற்றை மிகுதியாக்கியது. பிறமொழி கலப்பு இன்றி இனிய எளிய தமிழ்ச் சொற்களைக் கொண்டே பேசவும் எழுதவும் இயலும் என்று நடைமுறைப்படுத்தினார் "சுவாமி வேதாசலம்" எனும் தன் பெயரை மறைமலையடிகள் என மாற்றிக் கொண்டதோடு தம் மக்களின் பெயரையும் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றினார். இளம் வயதில் பல்வேறு இதழ்களில் கட்டுரைகள் எழுதிவந்த அடிகளார் ஞானசாகரம் (1902), Oriental Mystic Myna (1908), Ocean of Wisdom (1935) முதலான இதழ்களை நடத்திச் சிறந்த இதழாளராகத் திகழ்ந்தார். முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, சாகுந்தல நாடகம், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் முதலான பல நூல்களை எழுதியுள்ளார். முறையான பள்ளிக் கல்வியை முடித்திராத மறைமலையடிகள் ஆக்கிய நூல்களும் ஆற்றிய சொற்பொழிவுகளும் அவர் ஓர் அறிவுக்கடல் என்பதை நமக்கு உணர்த்தும்.

**வினாக்கள்:**

1. மறைமலையடிகள் அவர்களின் பெயர் என்ன?
2. மறைமலையடிகள் நடத்திய இதழ் எது?
3. யாருடைய நட்பு மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் பற்றை மிகுதியாக்கியது?
4. மறைமலை அடிகள் எழுதிய நூல்கள் எவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **3×6=18**

44) சென்னையில் உள்ள மயிலாப்பூர் கந்தகோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

**(அல்லது)**

திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.

45) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

46) உரிமைத்தாகம் கதையில் சகோதரிகள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ............ கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

**(அல்லது)**

சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

47) அ) 'ஒருமையுடன் நினது திரு' எனத் தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'மிகும்' என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுது.

----------

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com